Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

28.07.2023

**C.C No.11 /2021**

Depositions of - லட்சுமணராஜ் ..witness for ...Petitioner Side Witness -3

| | | |
|---|---|---|
| Name | - | லட்சுமண ராஜ்(PW- 3 ) |
| Father's and Husband's name | - | அரசன் |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.01.2024.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

(1 முதல் 4 வரையான எதிரிகள் ஆஜர். )

முதல் விசாரணை-

நான் சிந்தலைச்சேரியில் குடியிருந்து வருகிறேன். வாதியை தெரியும். எதிரிகளை தெரியும். கடந்த 06.06.2020ம் தேதி காலை 11.30 மணியளவில் , எரணம்பட்டிக்கு வடக்குப்பக்கம் சுமையா என்பவரின் தோட்டத்தில், எதிரிகள் சூர்யா, முரளி, அறிவானந்தம், ராஜ்குமார் ஆகியோர்கள் நொங்கு வெட்டிக்கொண்டிருந்தார்கள். சுமையா சென்று நொங்கு வெட்டுவதை தடுத்தார். சூர்யா மரத்தில் இருந்து மட்டையை பிடுங்கி சுமையாவின் மீது எறிந்தார். கீழே இருந்த மட்டையை கொண்டு அறிவானந்தம் சுமையாவின் வலது பக்க தோள்பட்டையில் அடித்தார். சுமையா வலி தாங்க முடியாமல் கீழே விழுந்துவிட்டார். நான் மற்றும் எனக்கு பின்னால் சில நபர்களும் வருவதை பார்த்த எதிரிகள் அங்கிருந்து

ஓடிவிட்டார்கள். நான் தான் சுமையாவை தாலுகா காவல்நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்காக அழைத்து சென்றேன். தாலுகா காவல்நிலையத்தில் சுமையா கொடுத்த புகாரை எடுக்கவில்லை. பின்னர் சுமையா கலெக்டரிடமும், எஸ்.பி.யிடமும் மனு கொடுத்தார். அவர்களும் சுமையா கொடுத்த புகாரை எடுக்கவில்லை. மேற்படி சுமையா தற்போது இந்த தனிப்புகாரை தாக்கல் செய்தார். தற்போதும் சுமையாவிற்கு கை தூக்க முடியாமல் தான் உள்ளது. அவர் பாதுகாப்பில்லாமல் தான் இருந்து வருகிறார்.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2024.01.24 16:42:06 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.